# இரண்டாவது
# உலகத் தமிழ்க் கருத்தரங்கு

**(1968 சனவரி 3 முதல் 10 வரை)**

சென்னை, இந்தியா

## பொது அரங்கு

## காலந்தோறும் தமிழ்

மு. வரதராசன்

**தமிழ்ப்பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, இந்தியா**

# காலந்தோறும் தமிழ்

**டாக்டர் மு. வரதராசன்**

*தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, இந்தியா*

## தலைவர் அவர்களே! அறிஞர் பெருமக்களே!

தமிழ் நாட்டின் தலைநகரத்தில் கூடியுள்ள உலகத் தமிழ்க் கருத்தரங்கு இது. வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இந்தப் பேரவையில் காலத்திற்கு ஏற்பத் தமிழ் வளர்ந்துவரும் வளர்ச்சி பற்றிப் பேசும் வாய்ப்புத் தந்தமைக்காக அமைப்பாளர்க்கு நன்றி கூறுகிறேன்.

## தொன்மை

தமிழ் மொழியின் இலக்கியம் இருபது நூற்றுண்டுகளுக்கு முன்னமே வளம்பெற்று வளரத் தொடங்கியது. அதற்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்னமே தமிழ் மொழி பண்பட்டு விளங்கியிருந்ததால்தான், அத்தகைய இலக்கிய வளர்ச்சி பெற முடிந்தது. தொல்காப்பியம் என்னும் பழந் தமிழ் இலக்கண நூலுக்குப் பாயிரம் இயற்றிய பனம்பாரனுர் கூறும் சான்று இங்குக் கருதத் தக்கது. அவர் காலத்தில் தமிழ்மொழி வடக்கே வேங்கடம் முதல் தெற்கே குமரி வரையில் பொது மொழியாய்ப் பரவியிருந்தது என்பதும், மக்களின் பேச்சு வழக்குப் பண்பட்டு அமைந்திருந்தது என் பதும், இலக்கியம் பல தோன்றிச் செய்யுள் வழக்கு ஏற்பட் டிருந்தது என்பதும், இலக்கண நூல்களும் இயற்றப்பட்டிருந் தன என்பதும் அவருடைய பாயிரத்தால் புலப்படுகின்றன. தொல்காப்பியனுரின் நூலை ஆராய்ந்தாலும் அவருக்கு முன்பே தமிழிலக்கியம் பண்பட்ட மரபு உடையதாக இருந்தது என்பது தெளிவாகின்றது. ஆகவே, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மொழியும் இலக்கியமும் போற்றத்தக்க வளர்ச் சியும் பண்பாடும் பெற்றிருந்தன என்பது அறியப்படும். ஆனுல், அக் காலத்து இலக்கியம் அனைத்தும் நமக்குக் கிடைக்கவில்லை. அவ்வப்போது பாடப்பட்டு ஆங்காங்கே

நின்றுவிட்ட பாட்டுக்கள் பல்லாயிரக் கணக்கில் இருந்தன. அவற்றைக் காப்பது எவ்வாறு என்ற கவலையான நிலைமை நேர்ந்தது. அப்போது புலவர் சிலரும், புரவலர் சிலரும் முன்வந்து அப்பாட்டுக்களில் சிறந்தவற்றை மட்டும் தொகுக்கவும் தொகுப்பிக்கவும் முயன்றார்கள். அவர்களின் நன் முயற்சியின் பயனாக, எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்னும் தொகை நூல்கள் இன்று நம் கைக்கு எட்டியுள்ளன. பழங் காலத் தமிழ் மொழி எவ்வாறு இருந்தது, பழைய தமிழ் இலக்கியம் எவ்வகை அமைப்புப் பெற்றிருந்தது என்பவற்றை அறியும் வகையில் நமக்கு உதவும் நூல்கள் அந்தத் தொகை நூல்களே ஆகும்.

## எளிமையும் செழுமையும்

பழந் தமிழ் இலக்கியத்தைச் சங்க இலக்கியம் என்று கூறிவருகிறோம். அந்த இலக்கியத்தில் இயற்கையோடு இயைந்த எளிமையும் காண்கிறோம்; செல்வ வாழ்வின் செழுமையும் காண்கிறோம். பெரும்பாலும், குறுந்தொகை நற்றிணை முதலான அகப்பொருட் பாட்டுக்களில் இயற்கையோடு இயைந்த எளிமையைக் காண்கிறோம்; புறநானூறு முதலிய புறப்பொருட் பகுதியில் பெரும்பாலும் செல்வ வாழ்வின் செழுமையைக் காண்கிறோம்.

சிற்றூர்கள் பலவாகவும், நகரங்கள் ஒரு சிலவாகவும் அவற்றிடையே போக்குவரத்தும் கலப்பும் குறைவாகவும் இருந்த காலம் அது. சிற்றூர் மக்கள் மலையிலும் காட்டிலும் வயலிலும் கடற்கரையிலும் அமைந்த ஊர்களில் வாழ்ந்து, அந்தந்த நிலத்தில் கிடைத்த உணவுப்பொருட்களுக்காக வேட்டை உழவு முதலிய தொழில்களில் ஈடுபட்டு வந்தனர். ஒத்த அன்பு அறிவு அழகு வயது முதலியன வாய்ந்த ஆணும் பெண்ணும் காதலராகித் திருமணம் செய்துகொண்டு இல்லறம் நடத்தி வந்தனர். அத்தகைய குடும்பத்தின் அளவான வாழ்க்கையே சிற்றூர்களின் இயல்பான வாழ்க்கையாக இருந்தது. அங்கே அவர்களிடையே தோன்றிய வாய் மொழிக் கதைகளும் பாடல்களும் நாடகங்களும் பல இருந்தன. அவை மக்கள்கலையாக வளர்ந்திருந்தன. அந்தப் பாடல்களிலும் கதைகளிலும் பிறவற்றிலும் சிற்றூர் மக்களின் இயற்கையோடு இயைந்த காதல் வாழ்வும் தொழில்களுமே

பொருளாக அமைந்திருந்தன. தொழில் முதலியவை வாழ்வுக்காகவே அமைந்தன ஆகையால், காதல்வாழ்வே பாடல்களின் உரிப்பொருளாக அமைந்தது. அந்த வாழ்வை எடுத்துக் காட்டும் பின்னணியாக அந்தந்த நிலம் தொழில் முதலியன (முதல் கருப்பொருள்களாக) அமைந்தன. நிலந்தோறும் தொழிலும் பழக்க வழக்கங்களும் வேறுவேறாக இருந்தமையால், நிலத்துக்கு நிலம் வாய்மொழிப் பாடல்களும் வேறுபட்டு அமைந்தன. அந்தப் பாடல்களே பிற்காலத்தில் புலவர் பெருமக்களின் கைப்பட்டு, குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்னும் ஐந்திணைப் பாடல்களாக வளர்ந்தன. வாய்மொழிப் பாடல்கள் நமக்குக் கிடைக்கவில்லை; கிடைக்க வழியும் இல்லை. ஆயின், அவற்றின் மரபை ஒட்டிப் புலவர்களால் இயற்றப்பட்ட ஐந்திணைப் பாட்டுக்கள் பல, குறுந்தொகை முதலான நூல்களில் கிடைக்கின்றன. அவற்றைக் கொண்டு, பழந் தமிழ்மக்களின் இயற்கையோடு இயைந்த எளிய வாழ்க்கைக்கு ஏற்ப அக்காலத்து இலக்கியம் தோன்றி வளர்ந்த தோற்றத்தையும் வளர்ச்சியையும் பற்றி அறியலாம்.

நகரங்களில் எழுந்த பாட்டுக்களிலும் நகரத் தலைவர்களைப் பற்றிய பாட்டுக்களிலும் செல்வச் செழுமை இடம் பெற்றுள்ளது; நாட்டை ஆளும் தலைவர்களின் வீரச் செயல்களும் கொடைவண்மையும் இடம் பெற்றுள்ளன. தலைவர்களுக்கு இடையே நிகழ்ந்த போர்களும், அப் போர்களில் தலைவர்களின் பொருட்டுப் பொருது உயிர்க்கு அஞ்சாத வீரச் செயல்கள் புரிந்த வீரர்களின் பெருமையும், வீரர்களுக்கும் கலைஞர்களுக்கும் வாரி வழங்கிய தலைவர்களின் வண்மையும் புகழப்பட்டுள்ளன. பத்துப்பாட்டுள் சிலவற்றிலும் புறநானூறு பதிற்றுப்பத்து ஆகிய தொகைநூல்களிலும் அத்தகைய புறப்பொருட் பகுதியைக் காணலாம்.

ஆகவே, இயற்கையோடு இயைந்த எளிமை அமைந்த சிற்றூர்களின் காதல் பாட்டுக்களும், செல்வ வாழ்வின் செழுமை வாய்ந்த நகரங்களின் வீரமும் கொடையும் பற்றிய பாட்டுக்களும் வாய்மொழி இலக்கியங்களாக விளங்கின என்றும், அந்த மக்களிலக்கியமே அடிப்படையாகக் கொண்டு புலவர்களின் இலக்கியம் அமைந்தது என்றும் கொள்ளுதல் பொருந்தும்.

## பொதுவான கற்பனை: வரலாறு

மக்களிலக்கியமாகிய காதல் பாட்டுக்கள் இன்னுருடைய காதல் என்று ஆளைக் குறிப்பிடாமல், பொதுவாக எல்லோரும் கற்பனை செய்து உணரத் தக்க வகையில் யாரோ ஒருவன் ஒருத்தியின் காதல்வாழ்வு எனப் பாடப்பட்டு வழங்கின. ஆனால் வீரமும் கொடையும் எல்லோர்க்கும் பொதுவான கற்பனையாக நிற்க இயலாமையால், குறிப்பிட்ட இன்ன தலைவனுடையன என்று சுட்டிப் பாடும் மரபு இருந்தது. இன்னுருடைய காதல் என்று பெயர் குறித்து ஊர் நடுவே பாடித் திரிய முடியாது. ஆனால் இன்னவனுடைய வீரச் செயல் என்றும் இன்னவன் கொடைச் சிறப்பு என்றும் பாடித் திரிவது பெருமையாகவும் பாராட்டாகவும் இருந்தது. மக்களிலக்கியத்தில் இருந்த இந்த மரபுகளே புலவர்களின் இலக்கியத்திற்கும் பொருந்துவனவாகக் கொள்ளப்பட்டன.

> மக்கள் நுதலிய அகனைந் திணையும்
> சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்
>
> புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
> அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே

என்று தொல்காப்பியனார் இலக்கணம் வகுத்த காலத்திலேயே அந்த மரபுகள் இலக்கியத்தில் வேரூன்றியிருந்தன என்பது தெளியப்படுகின்றது.

சங்க இலக்கியத்தில் புறத்திணைப் பாட்டுக்களில் அத்தகைய பொதுவான கற்பனை இல்லை. இன்ன வேந்தன் இன்ன இடத்தில் இன்ன காரணம் பற்றி நிகழ்த்திய போர் பற்றியது, இன்ன வள்ளல் இன்னார்க்குத் தந்த கொடை பற்றியது என்ற வரலாற்றுக் குறிப்புக்கள் புறத்திணைப் பாட்டுக்களுக்கு உள்ளன. பொதுவான ஒரு கற்பனைத் தலைவனைப் படைத்து அவனுக்கும் கற்பனைப் பகையரசனுக்கும் நடந்த போர் என்ற முறையில் புறப்பாட்டு இல்லை. முத்தொள்ளாயிரத்திலும் மூவேந்தர் பற்றிய குறிப்பு உள்ளது. இடைக்காலத்து இலக்கண நூலாகிய புறப்பொருள் வெண்பா மாலையில் எடுத்துக்காட்டாக உள்ள வெண்பாக்களில் மட்டுமே பொதுவான கற்பனை உள்ளது. புறநானூறு முதலிய சங்கப் பாட்டுக்கள், நிகழ்ந்த நிகழ்ச்சிகளை—வரலாற்றுக் குறிப்புக்களை—உணர்ச்சியுடனும் சிற்சில இடங்

களில் சிறிது உயர்வு நவிற்சியுடனும் எடுத்துரைப்பனவாக உள்ளன. அவற்றுள் சிலவற்றில் கற்பனை நயமும் கலந்துள்ளது எனினும், அவற்றுள் கூறப்படும் நிகழ்ச்சிகள் கற்பனை அல்ல; புகழப்படும் மாந்தரும் கற்பனைமாந்தர் அல்லர். ''புறப்பொருள் உலகியலானன்றி வாராமையின் அது நாடக வழக்கம் அன்றாயிற்று'' எனப் பழைய உரையாசிரியராகிய இளம்பூரணர் கூறியுள்ள கருத்து இதனை வலியுறுத்துவதாகும்.

## அகத்திணை : புறத்திணை

அடுத்துவந்த காலத்தில் சங்க மருவிய காலத்து நூலாகிய சிலப்பதிகாரத்தில் அதன் ஆசிரியர் இளங்கோவடிகள் தம் காலத்தில் வழங்கிய வாய்மொழி இலக்கியப் பகுதிகள் சிலவற்றை அமைத்து வா வத்துள்ளார். கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, அம்மானை வரி, கந்துக வரி, ஊசல் வரி, வள்ளைப்பாட்டு என்பவை அவர் அவ்வாறு வாழவைத்த பழம் பாடல்கள். அவற்றுள்ளும் கானல் வரி முதலியவற்றுள் அமைந்த காதல் பாடல்களில் காதலரின் பெயர் சுட்டப்படாமல் பொதுவான கற்பனை இருத்தலைக் காணலாம். புறப்பொருட் பகுதியில் அரசரின் குடியும் கொடியும் சுட்டப்படுதலும் காணலாம்.

மற்றும் ஒன்று: பொதுவான கற்பனை மாந்தரின் காதல் பாடல்கள் கணக்கின்றிப் பெருகவும் முடியும்; காலம் கடந்து வாழவும் முடியும். குறிப்பிட்ட தலைவர்களின் வீரச் செயல்களும் வண்மைப் பண்புகளும் பற்றிய பாடல்கள் அவ்வாறு கணக்கின்றிப் பெருகுதலும் அரிது; அந்தத் தலைவர்களின் காலத்திற்குப் பிறகு அதே ஆர்வத்துடன் போற்றப்படுதலும் அரிது. புலவர் சிலர் ஒருவனது பெருஞ் செயலைப் பாடிவிட்ட பிறகு, மற்றவர் பாடுவதற்கு இடம் இல்லாமற் போகும். தலைவன் மறைந்த பிறகு வேறொருவன் ஆட்சியை ஏற்றபோது, பழைய தலைவனைப் பாராட்டிப் பாடுவதற்குத் தேவையும் இல்லாமற் போகும். ஆனால் பொதுவான காதலுள்ளத்தைப் பலரும் பலவாறு புனைந்து பலவகை நுட்ப வேறுபாடுகளுடன் புதுப்புதுக் , கற்பனைகளைச் சேர்த்துப் பாடுதல் முடியும். ஆகவே காதல் பாட்டுக்கள் கணக்கின்றிப்

பெருகின; காலம் கடந்தும் வாழ்ந்தன. அதனுல்தான் அகத் திணைப் பாட்டுக்கள் மிகுதியாகவும், புறத்திணைப் பாட்டுக்கள் குறைவாகவும் பழந்தமிழ் இலக்கியத்தில் உள்ளன.

இன்னும் ஒன்று: கற்பனை இலக்கியமே வழிவழியாக வரும் மரபுகளைப் போற்றி விளக்க முடியும். வரலாற்று வழி அமைந்த இலக்கியத்தில் அவ்வக் காலத்து நிகழ்ச்சிகளை அமைத்துப் பாடுதலே முதல் நோக்கமாக இருக்கும். பழைய மரபுகளைப் போற்றி அமைத்தல் முதன்மையாக இருக்காது. ஆதலால், அகத்திணைப் பாட்டுக்களில் திணைவகைகளும் முதல் கருஉரிப் பொருள் மரபுகளும் செறிவாக அமைந்திருத்தல் போல், புறத்திணைப் பாட்டுக்களில் பழைய மரபுகள் அவ் வளவு செறிவாக அமையவில்லை. புறத்திணை ஏழு எனத் தொல்காப்பியனுர் கூறிய மரபும் கடந்து பிற்காலத்தே பன்னிரண்டு திணைகளாக வேறுபட்டு வளர்ந்தமையும், புற நானூற்றுப் பாட்டுக்களின் குறிப்புக்கள் அந்த வேறு பாட்டுக்கு இடம் தந்தமையும் காணலாம். தொல்காப்பிய னுர், அகத்திணையை விளக்கிய அவ்வளவு விரிவாகப் புறத் திணையை விளக்கிக் கூருமையும் இங்குக் கருத்தில் கொள்ள லாம். புறத்திணை ஏழுக்கும் சில பல துறைகளைக் குறிப் பிட்டுச் சென்றுரே அல்லாமல் விளக்கங்கள் தரவில்லை. பழங்காலத்திலேயே புறத்திணைக்கு அகத்திணைபோல் விரி வான மரபுகள் ஏற்படவில்லை என்பதை இதனுலும் அறி யலாம்.

அகமும் புறமுமாக இவ்வாறு அமைந்த பழந்தமிழ் இலக்கியம், அக்காலத் தமிழ்மக்களின் வாழ்வை ஒட்டித் தமிழ்ப் புலவர்களால் இயற்றப்பட்டு அமைந்த இலக்கிய மாகும். அதில் பிறமொழி இலக்கியச் சார்பு இல்லை. பிற சொற் கலப்பும் மிக அருகிக் காணப்படுகிறது. வட நாட்டு மக்களுடன் ஏற்பட்ட தொடர்பால் நேர்ந்த கலப்பு அது; வட மொழி இலக்கியங்களின் தொடர்பு ஏற்படாத காலம் அது. காவியங்கள் எழுந்த காலத்தில்தான் வட மொழி இலக்கியங்களின் சார்பு காணப்படுகின்றது. சங்க காலத்தில் அத்தகைய சார்பு இல்லை. ஆகவே, தமிழர்தம் வாழ்வி லிருந்து நேரே அமைந்த இலக்கியம் சங்க இலக்கியம் ஆகும்.

## நீதி நூல்கள்

அதனை அடுத்த காலத்தில் வட நாட்டு அறிஞர்களின் வாயிலாகச் சமண பௌத்த சமயங்களின் தொடர்பு ஏற்பட்டது. மக்களின் வாழ்விற்கு இலக்கிய நூல்கள் மட்டும் போதா, நீதி நூல்களும் வேண்டும் என்ற கொள்கை தலையெடுத்த காலம் அது. காதலும் வீரமும் கொடையுமாகவே வாழ்க்கை நடத்திக் கழிவதில் பயன் இல்லை என்றும், உயிர் உய்யும்பொருட்டு அறம் முதலியன பற்றிய தெளிவான குறிக்கோள்கள் வேண்டும் என்றும், இந்த உலக வாழ்விற்கும் நீதி முறைகள் வேண்டும் என்றும் அறிஞர்கள் உணர்த்த முன்வந்தனர். தமிழ் அவர்களின் தொண்டுக்கும் இடம் தந்தது. திருக்குறள், பழமொழி நானூறு, நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திரிகடுகம், ஆசாரக் கோவை, சிறுபஞ்ச மூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி ஆகிய நீதி நூல்கள் இயற்றப்பட்டன. இவற்றோடு, பழைய மரபை ஒட்டிய சில அகப்பொருள் நூல்களும் இயற்றப்பட்டன. கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை ஆகியவை அகப்பொருள் நூல்கள். களவழி என்னும் புறப்பொருள் நூல் ஒன்றும் தோன்றியது. இவை பதினெட்டனையும் கீழ்க்கணக்கு நூல்கள் என்று வழங்கலாயினர்.

அவற்றுள் அமைந்த நீதி நூல்கள் சில இலக்கியச்சுவை அற்றவை. கலையியல்பு இல்லாத காரணம் பற்றி இக்காலத் திறனாய்வாளர் அவற்றை இலக்கியம் என்று கொள்ளத் தயங்குவர். அறம் பொருள் இன்பம் வீடு பற்றி ஓதுவன எல்லாம் இலக்கியம் என்னும் அக்காலக் கொள்கை பற்றி அவை போற்றிக் கொள்ளப்படுகின்றன.

## காவியங்கள்

நீதிகளை நேரே ஆசிரியர் மாணவர்க்கு உரைப்பதுபோல் உரைத்தலைவிட, நாடு அறிந்த பெருமக்களின் வாழ்க்கைகளை எடுத்துக் காட்டி, அவற்றின் வாயிலாக நீதிகளைப் புகட்டுதல் பயன்தரும் என்று சான்றோர் ஒருவர் உணர்ந்தார். அவரே

இளங்கோவடிகள். அவர் இயற்றிய சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் நீதியுரைகள் விளங்கக் காணலாம். காவியத்தின் இறுதியில் ஆசிரியரே முன்வந்து,

> தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
> பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
> தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்

என்று அறிவுரை வழங்குகிறார். இப் புதுமுயற்சியை மேற்கொண்டு தமிழ் மொழிக்குக் காவியச் செல்வத்தைத் தந்த இளங்கோவடிகள், பழைய இலக்கிய மரபை நன்கு உணர்ந்தவர் ஆகையால், காவியத்தின் இடையிடையே அகப்பொருட் பகுதிகளும் புறப்பொருட் பகுதிகளும் அமைத்துத் தந்துள்ளார். தோழி தலைவி முன்னின்று வரைவு கடாதல், கழற்றெதிர் மறை, தமியளாக இடத்தெதிர்ப்பட்ட தலைவியை நோக்கித் தலைவன் கூறியது, தலைவன் பாங்கன் கேட்ப உற்றதுரைத்தல், பொய் பாராட்டல் முதலிய பல அகத்திணைப் பகுதிகள் கானல் வரியில் அமைந்திருக்கின்றன. கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய காஞ்சி, மகட்பாற் காஞ்சி, எதிரூன்றிய காஞ்சி, குடைநிலை வஞ்சி, கொற்ற வஞ்சி, மாராய வஞ்சி, பெருஞ்சோற்று வஞ்சி, கொற்ற வள்ளை, களவேள்வி முதலிய புறத்திணைப் பகுதிகள் கால்கோட் காதையுள் குறிப்பிடப்படுகின்றன. கால்கோள், நீர்ப்படை, நடுகல், வாழ்த்து முதலியனவும் பழைய புறத்திணை மரபை ஒட்டி அமைந்தவைகளே. இவ்வாறு இளங்கோவடிகள் தம் காவியத்துள் பழைய இலக்கிய மரபுகளைப் போற்றியதோடு, வாய்மொழி இலக்கியப் பகுதிகளையும் போற்றி, வேட்டுவ வரி ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை முதலியவற்றையும் தந்துள்ளார். இவ்வாறு தமிழின் தொடர்ந்த இலக்கிய வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதாகச் சிலப்பதிகாரம் விளங்குகிறது.

மணிமேகலை என்னும் காவியம் அதனை அடுத்துத் தோன்றியதே எனினும், ஒரு பெரிய வாழ்க்கையை விளக்குவதே எனினும், நீதி நூல் போலவும் சமய நூல் போலவும் பெரும்பாலும் அமைந்துள்ளது; இலக்கியச் சுவை குறைந்துள்ளது. இக்காலத்தில் பாரதமும் இராமாயணமும் தமிழில் இயற்றப்பட்டன. அவற்றின் பாக்கள் சிலவே கிடைக்கின்றன.

## பக்திப் பாடல்கள்

நீதி நூல்களின் காலத்திலும் அக் காலத்தை அடுத்தும் நாட்டில் நிகழ்ந்த மாறுதல்களும் குழப்பங்களும் பக்தியியக்கத்தின் தோற்றுவாய்க்குக் காரணம் ஆயின. அகமும் புறமும் போதா, நீதி நூல்களும் போதா, உலகத்தைப் படைத்துக் காக்கும் கடவுளிடம் நெஞ்சை ஈடுபடுத்திப் பக்தி செலுத்துதலே உய்வுக்கு வழி என்ற கொள்கையை வலியுறுத்தும் சான்றோர் தோன்றினர். சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் ஆற்றிய அக்காலத் தொண்டுகளுக்கு ஏற்பத் தமிழ் விரிவு பெற்றது; பலர்க்கும் பயன்படும் வகையில் நெகிழ்ச்சியும் பெற்றது எனலாம்.

இதுவரை நேரே மக்களின் வாழ்க்கைக்கும் வாழ்க்கையை ஒட்டிய கற்பனைக்கும் பின்னணியாகப் பயன்பட்டு வந்த இயற்கை, ஆழ்வார் நாயன்மார் பாடல்களில் பக்தி வழி பாட்டுக்கும் பின்னணியாகப் பயன்பட்டது.

கான மஞ்ஞை அறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை உருட்டும்
குன்ற நாடன் கேண்மை என்றும்
நன்றுமன் வாழி தோழி உண்கண்
நீரோடு ஒராங்குத் தணப்ப
உள்ளாது அகறல் வல்லு வோர்க்கே

என்னும் சங்கப் பாட்டில் மயில் முட்டையைக் காண்கிறோம். அதை ஒரு குரங்கின் குட்டி பாறையில் உருட்டி விளையாடுகின்றது. இந்தப் பின்னணியில் நாம் காண்பது என்ன? காதலனுடைய பிரிவால் துயருற்று வாடும் காதலியைக் காண்கிறோம். அவள் கண்ணீர் சொரிந்து துன்புறுதலையும், தன்னை விட்டுப் பிரிந்து தனியே எங்கோ இருக்கும் வன்கண்மையைக் காதலர் பெற்றுவிட்டாரே என்று ஏங்கும் ஏக்கத்தையும் காண்கிறோம். மயிலின் துன்பம் உணராமல் முட்டையை உருட்டும் குரங்குக் குட்டியின் மனநிலை, காதலியின் துயரம் உணராமல் பிரிந்து வாழும் காதலன் மனநிலைக்குப் பின்னணி ஆயிற்று.

ஆடமைக் குயின்ற அவிர் துளை மருங்கின்
கோடை அவ்வளி குழலிசை யாகப்
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசை
தோடமை முழவின் துதைகுரல் ஆகக்
கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டுயாழ் ஆக
இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத்து இயலி யாடுமயில்
நனவுப்புகு விறலியின் தோன்றும். . . .

என்ற சங்கப் பாட்டிலும் மயில் முதலானவை இயற்கைப் பின்னணியாக அமைகின்றன. மலைச்சாரலில் தான் ஒரு நாள் காதலனைக் கண்டு தன் உள்ளத்தைப் பறிகொடுத்த நிலையை எடுத்துரைக்கின்றாள் காதலி. அவளுடைய நிலைமைக்குப் பின்னணியாக அமைந்த இயற்கைக் காட்சி இது. இக் காட்சியில் இயற்கைக் குழலிசை, மலையில் வளர்ந்துள்ள மூங்கிலின் துளைவழியாக மேல்காற்று வீசும்போது கேட்கின்றது; அருவிநீர் முழவாக ஒலிக்கின்றது; மானின் குரல் தூம்பாக இசைக்கின்றது; வண்டுகளின் இனிய ஒலி யாழிசையாக அமைகின்றது; குரங்குகள் நாட்டியக் கலையை நுகரக் கூட்டமாகக் குழுமியுள்ளன; நாட்டியம் தொடங்குகின்றது; மயில் ஒன்று தோகை விரித்து ஆடியவாறே அங்கே வந்து தோன்றுகின்றது. இவ்வாறு சங்க காலத்தில் காதல் கற்பனைகளுக்குப் பயன்பட்ட இயற்கையே, ஆழ்வார் நாயன்மார்களின் காலத்தில் பக்தி வழிபாட்டுக்குப் பின்னணியாக அமைந்தது காண்போம்:

உரைசேரும் எண்பத்து நான்குநூ
    றாயிரமாம் யோனி பேதம்
நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய்
    அங்கங்கே நின்றான் கோயில்
வரைசேரும் முகில்முழவ மயில்கள்பல
    நடமாட வண்டு பாட
விரைசேர்பொன் இதழிதர மென்காந்தள்
    கையேற்கும் மிழலை யாமே.

மாலயனும் காண்பரிய மாலெரியாய் நிமிர்ந்தோன்
வன்னிமதி சென்னிமிசை வைத்தவன்மொய்த் தெழுந்த
வேலைவிடம் உண்டமணி கண்டன்விடை ஊரும்
விமலனுமை யவளோடு மேவியஊர் வினவில்
சோலைமலி குயில்கூவக் கோலமயில் ஆலச்
சுரும்பொடுவண்டு இசைமுரலப் பசுங்கிளிசொல் துதிக்கக்
காலையிலும் மாலையிலும் கடவுளடி பணிந்து
கசிந்தமனத் தவர்பயிலும் கலயநல்லூர் காணே.

இந்தத் தேவாரப் பாடல்களில் முகில் முழவு இசைக்க, வண்டுகள் இன்னிசை பாட, மயில்க்ள் நடமாடுகின்றன; குயில்கள் கூவ, வண்டுகள் இசைக்க, கோலமயில்கள் நாட்டியம் ஆடுகின்றன; கிளிகள் சொற்களை ஒலித்துத் துதிக்கின்றன. இவ்வாறு இயற்கையின் இசை நாட்டியம் எல்லாம் கடவுளின் கோயிலுக்குப் பின்னணி ஆகின்றன; கடவுளின் வழிபாடான ஆடல்பாடல்களாக அமைகின்றன.

இவ்வாறே பறவை முதலியவற்றைத் தூது அனுப்பும் காதல் துறையாக அமைந்த சங்கப் பாட்டுக்களுக்கும் பக்திப் பாடல்களுக்கும் தொடர்பு உள்ளது:

இறைஞ்சிய குரல பைந்தாள் செந்தினை
வரையோன் வண்மை போலப் பலவுடன்
கிளையோடு உண்ணும் வளைவாய்ப் பாசினம்!
நற்றூர் மார்பன் காண்குறின் சிறிய
நற்கவற்கு அறிய உரைமின் பிற்றை
அணங்கும் அணங்கும் போலும் அணங்கி
வறும்புனம் காவல் விடாமை
அறிந்தனிர் அல்லிரோ அறனில் யாயே.

இச் சங்கப் பாட்டில் கிளிக்குக் கூறுவதாக ஒரு வேண்டுகோள் அமைந்துள்ளது. தினைப்புனத்திற்குச் செல்லுமாறு தாய் விடவில்லை என்ற செய்தியையும், அதனால் நேர்ந்த பிரிவுத் துன்பத்தையும் காதலனுக்கு அறிவிக்குமாறு வேண்டுகோள் அமைந்துள்ளது.

என்பிழைகோப் பதுபோலப் பனிவாடை ஈர்கின்ற
என்பிழையே நினைந்தருளி அருளாத திருமாலார்க்கு
என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கென்று ஒருவாய்ச் சொல்
என்பிழைக்கும் இளங்கிளியே யான்வளர்த்த நீஅலையே.

இத் திருவாய்மொழிப் பாட்டில், தெய்வக்காதல் கொண்ட நம்மாழ்வார் திருமாலுக்கு ஒரு சொல் சொல்லிவருமாறு கிளியை வேண்டுகிறார். காதல் துறையும் தூதனுப்பும் மரபும் பக்திநெறிக்குப் பயன்பட்டுள்ளன.

## நெகிழ்வும் எளிமையும்

பொருளால் அமையும் வேறுபாடு மட்டும் அல்லாமல், பாட்டின் வடிவால் அமையும் வேறுபாடும் இங்கு ஆராயத் தக்கது. மாணிக்கவாசகர், தொண்டரடிப்பொடியாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகியோர் மக்களிலக்கியமாக வழங்கிய பாடல்களை ஆராய்ந்து அவற்றிலிருந்து பல வடிவங்களை எடுத்துப் பயன்படுத்தினார்கள். உந்தி, குயில், சாழல், ஊசல், பள்ளியெழுச்சி, அம்மானை, பாவை முதலிய பாடல்கள் மக்களிலக்கியத்தில் அவர்கள் கண்டெடுத்தவை. இதுவும் ஆழ்வார் நாயன்மார்கள் மக்களுக்காக எளிமையாக்கிப் பாட விரும்பிய ஆர்வத்திற்குச் சான்றாக உள்ளது. சங்கப் பாட்டில் சொற்கள் செறிவாக அமைந்துள்ளன. நாயன்மார் ஆழ்வார் பாடல்களில் ஒருவகை நெகிழ்வு உள்ளது. புலவர் தமிழாக இருந்தது மற்றவர்க்கும் பயன்படுமாறு நெகிழ்ந்த நெகிழ்ச்சியோடு, இயற்றமிழாக இருந்தது இசைத்தமிழாக நெகிழ்ந்த நெகிழ்ச்சியும் இங்கு உள்ளது. பெரும்பாலும் மாச்சீர்களாக வரையறைப்பட்டு இருந்த ஆசிரியப்பாக்களின் சொற்கள் செறிவாக அமைவது இயல்பு; இசைநயத்திற்காகப் பலவாறு நீண்டு ஓசைக்கு ஏற்ப மாறி அமையும் பிற சீர்களில் அவ்வளவு செறிவு தேவை இல்லாமற் போகிறது.

சங்க காலத்திலேயே சில பாக்களிடையே ஒருவகை வேறுபாடு இருந்தது. ஆசிரியப்பாவும் வெண்பாவும் செறிவு மிக்கவை. கலிப்பாவும் பரிபாடலும் செறிவு குறைந்தவை. அதனாலேயே, மக்களிலக்கியத்தோடு தொடர்பு கொண்ட அகத்திணைப் பாட்டுக்கள் கலிப்பாவாலும் பரிபாடலாலும் பாடப்பெறும் என்று தொல்காப்பியனார் ஓதியுள்ளார்:

> நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
> பாடல் சான்ற புலனெறி வழக்கம்
> கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்
> உரிய தாகும் என்மனார் புலவர்.

கலியும் பரிபாடலும் அகத்திணைப் பாட்டுக்கு உரிமை மிகுந்திருந்த காரணம், அவை இரண்டும் ஓசைநயம் உடையவை. பிற்காலத்தில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழோடு இசை பாடி வழிபட்டபோது, கலிப்பாவையும் பரிபாடலையும் விட நெகிழ்வும் எளிமையும் மிக்க இசைப்பாடல் வடிவங்களை நாடினார்கள்.

தொல்காப்பியனாரின் காலத்திலேயே அவ்வாறு இசைப் பாடல் வடிவங்களில் இலக்கியம் வளர்த்த வழக்கம் உண்டு என அறிகிறோம். பண்ணத்தி என்பது செய்யுள் வடிவங்களுள் ஒன்றாக அவர் எடுத்துரைத்துள்ளார். அது பாட்டின் இயல்பு உடையதாய், இசைத்தமிழுக்கு உரியதாய், இயற்றமிழ் நூல்களில் வழங்குவதாகும். ''பண்ணைத் தோற்றுவித்தலின் பண்ணத்தி என்றார்; அவையாவன சிற்றிசையும் பேரிசையும் முதலாக இசைத்தமிழில் ஓதப்படுவன'' என்கிறார் இளம்பூரணர். இக் காலத்தில் வெண்பா ஆசிரியப்பா விருத்தம் முதலியவற்றுள் அடங்காமல், சிந்து கண்ணி முதலிய இசைப்பாடல்கள் இலக்கியத்துள் இடம்பெறவில்லையா? அவைபோல் பழங்காலத்தில் யாப்பு வகைகளுள் அடங்காமல் இலக்கியத்தில் இடம் பெற்ற இசைப்பாடல் வடிவங்களைப் பண்ணத்தி என்று குறித்தார். சங்க இலக்கியத்திலிருந்து எடுத்துக்காட்டுத் தர இயலாத பேராசிரியர், ''அவை முற்காலத்தார் செய்யுளுட் காணாமையின் காட்டாமாயினும். இக்காலத்து உள்ளனவேல் கண்டுகொள்க. இலக்கணம் உண்மையின் இலக்கியம் காணாமாயினும் அமையும் என்பது'' என்று கூறியுள்ளார். ஆகவே, ஆழ்வார் நாயன்மார் பாடல்கள் போல், அவற்றிற்கு முன் இலக்கியத்தில் இடம் பெற்ற இசைப்பாடல் வடிவங்கள் இருந்திருத்தல் வேண்டும்.

எவ்வாறாயினும், ஆழ்வார் நாயன்மாரின் பாடல்கள் செல்வாக்குப் பெற்றபின், வெண்பாவுக்கும் ஆசிரியப்பாவுக்கும் இருந்த செல்வாக்குக் குறைந்தது என்பது உண்மை. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்குப் பிறகும் ஆசிரியப்பாவாலும் வெண்பாவாலும் நூல்கள் சில இயற்றப்பட்டன. பெருங்கதை, வெண்பாமாலை, கல்லாடம் என்பவை எடுத்துக் காட்டுக்கள். ஆயினும், பண்ணத்தியிலிருந்து வளர்ந்த விருத்தம் முதலிய வடிவங்களே செல்வாக்குப் பெற்றன. விருத்தத்தால் இயற்றப்பட்ட காவியங்களும் பிற நூல்களும்

மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தன. திருத்தக்கதேவர் சேக்கிழார் கம்பர் முதல் இந் நூற்றாண்டின் பாரதியார் கவிமணி பாரதிதாசன் வரையில் புலவர் பலரும் விருத்தத்தைப் போற்றி அவ் வடிவில் தம் படைப்புக்களைத் தர முற்பட்டமை காணலாம். தமிழ் அவ்வக்காலத்தில் அமைந்த புதுப்புது யாப்பு வடிவங்களை வரவேற்று வாழவைத்தமைக்கு இதுவும் ஒரு சான்று ஆகும்.

## புது நூல் வகைகள்

ஆழ்வார் நாயன்மார் காலத்தில் கோவை, உலா, மடல் முதலிய பெயர்களால் புதிய நூல் வகைகளும் சில தோன்றின. அவைகளும் சமயச் சார்பு உடையனவே. பழைய காதல் துறைகளைப் பயன்படுத்திப் புதிய செய்யுள் வகைகளால் இயற்றப்பட்டவை அவை. ஒரு கதைபோல் தொடர்ச்சி தோன்றுமாறு கற்பனைக் காதலர்களின் காதல் பற்றிய பல துறைகளையும் நானூறு செய்யுட்களால் பாடிக் கோவைப் படுத்துவது கோவை. மகளிர் பலர் ஒரு தலைவனின் உலாக் காட்சியைக் கண்டு காதல் கொள்வதாகப் பாடுவது உலா. மடல் என்பதும் அகத்திணையில் ஒரு துறையே. இவ்வாறு காதல் நிலைகளில் பலவற்றையும் பக்திநெறிக்குப் பயன்படுத்தித் தனித்தனி நூல்கள் எழுந்தன.

ஒன்பதாம் நூற்றாண்டுக்குப் பிறகு மீண்டும் காவியங்கள் தோன்றின. அவற்றில் சமயச் சார்பும் பெருகி, இலக்கியச் சுவையும் மிகுந்தன. சீவக சிந்தாமணி, சூளாமணி, கம்பராமாயணம் முதலியன அத்தகையவை. அவற்றுள் பல வடமொழியில் உள்ள முதல் நூல்களைத் தழுவியும் வடமொழிக் காவிய இலக்கணத்தை ஒட்டியும் அமைந்தவை. ஆயினும், கம்பரின் காவியம் இலக்கியச் சுவையில் முதல் நூலையும் விஞ்சி, இணையற்ற காவியமாய்த் திகழ்கிறது. வடமொழியில் முதல்நூல் இன்றி, தமிழ் முதல்நூலாய் எழுந்த காவியம் சிவனடியார்களின் வரலாறு கூறும் பெரியபுராணம் ஆகும். காவியங்கள் எல்லாம் விரிவான வருணனைகள் உடையனவாய்ப் பெருநூல்களாய் அமைந்தன.

பெரிய காவியங்கள் தோன்றிச் செல்வாக்குப்பெற்ற அக் காலத்திலேயே, சிறு நூல்களும் தேவையாயின. இரட்டை மணிமாலை, உலா, பிள்ளைத்தமிழ், கலம்பகம், அந்தாதி

முதலிய பெயர்களால் சிறுநூல்கள் இயற்றப்பட்டன. அவை சமயச் சார்பாகவும் எழுந்தன; அரசர்களின் புகழ் பாடுவன வாகவும் எழுந்தன. சங்க காலத்திற்குப் பிறகு அரசர்களைப் புகழ்ந்து பாடும் நூல்கள் பல தோன்றிய காலம் அது. கோவைகளும் அரசர்களைப் பற்றிப் பாடப்பட்டன. போர்க் களத்து வீரச் செயல்களைப் புகழ்வதற்காகத் தோன்றியது பரணி என்னும் நூல்வகையாகும். போர்க்கள மிடுக்கையும் பரபரப்பையும் எடுத்துக்காட்டும் வகையில் எடுப்பும் வேகமும் கொண்ட ஓசை உடைய செய்யுள்வகைகளைப் பரணி பயன் படுத்தியது.

## அறிவு நூல்கள்

உள்ளத்திற்கு விருந்தாகும் இலக்கிய நூல்கள் போல், அறிவுக்கு விருந்தாகும் இலக்கண நூல்களும் உரைநூல்களும் அக் காலத்தில் எழுந்தன. அவற்றிற்கு முன்னமே அறிவுத் துறை பற்றிய நூல்கள் பல தமிழில் இருந்திருக்க வேண்டும். ஓவியம், சிற்பம், இசை முதலிய கலைகளைப் பற்றிய நூல் களும், யானை பயிற்றல், வாணிகம், மருத்துவம் முதலிய தொழில்களைப் பற்றிய நூல்களும், கணக்குநூல், வானநூல் முதலிய அறிவியல் நூல்களும் பல தமிழில் இருந்தன. ஆயின், அவை இலக்கியத்திற்கு நிகராகப் புலவர்களால் போற்றப்படவில்லை. அவை குடும்பக் கலைகளாய் வழிவழி யாய்க் கற்றுப் போற்றப்பட்டமையாலும், கல்வெட்டுக்கள் போல் பிழையான தமிழில் எழுதப்பட்டமையாலும் புலவர் கள் அவற்றை மதிக்கவில்லை. நாடகங்கள் பல கோயில் களிலும் பிறவிடங்களிலும் நடிக்கப்பட்டு வந்தபோதிலும், அந்த நாடகங்களின் தமிழ் கொச்சையாகவும் பிழையான தாகவும் இருந்த காரணத்தால், அவற்றையும் புலவர்கள் போற்றவில்லை. ஆகவே, அவை அனைத்தும் காக்கப்படாமல் போயின. தமிழுக்கு அது பெரிய இழப்பாகவே முடிந்தது. அறிவுத்துறையில் அழியாமல் காக்கப்பட்ட நூல்கள், புலவர் களாலேயே இயற்றப்பட்ட இலக்கண நூல்களும், உரைநூல் களும் மட்டுமே ஆகும். வீரசோழியம், யாப்பருங்கலம், நன்னூல், நேமிநாதம் முதலியன இலக்கண நூல்கள். களவி யலுரைகாரர், இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார் முதலானவர்கள்

உரை நூல்கள் தந்தார்கள். அவர்களால் பிழையற்ற தமிழ் உரைநடை வளர்ந்தது. சமயத்துறையிலும் அறிவு நூல்கள் எழுந்தன. சைவ சமய அறிஞர் சிலர் செய்யுள் வடிவில் சாத்திர நூல்கள் இயற்றினார்கள். சித்தர்கள் எளிய தமிழில் அரிய கருத்துக்களை அமைத்துப் பாடினார்கள். வைணவ அறிஞர் சிலர் வடசொற்கள் விரவிய மணிப்பிர வாள நடையில் ஆழ்வார் பாடல்களுக்கு விளக்கங்கள் எழுதி னார்கள். நிகண்டுகளும் இயற்றப்பட்டன. இவ்வாறு தமிழ் பல துறையில் விரிவும் விளக்கமும் பெறலாயிற்று.

## பழமை மீளல்

மீண்டும் காவியங்கள் போல் நீண்ட செய்யுள் நூல்கள் தோன்றின. அவற்றுள் சில, தெய்வங்களையே காவியத் தலை வர்களாகக் கொண்டு அற்புதச் செயல்களை விளக்குவனவாக அமைந்தன; புராணங்கள் என்ற பெயருடன் வட நூல்களைத் தழுவி இயற்றப்பட்டன. கோயில்களை ஒட்டித் தலபுரா ணங்கள் எழுந்தன. பாரதம், நைடதம், நளவெண்பா என் பவை இலக்கியச் சுவையும் பெற்றுவிளங்கின.

நீதிநூல்கள் மீண்டும் தோன்றத் தொடங்கின. குமர குருபரர் சிவப்பிரகாசர் முதலிய புலவர்களும் அத்துறையில் ஈடுபட்டனர். சதகங்கள் என்ற பெயரால் விருத்தச் செய்யு ளால் நீதி நூல்கள் சில இயற்றப்பட்டன.

காவியங்கள் புராணங்கள் என்னும் பெரு நூல்களும், பிள்ளைத்தமிழ் உலா முதலிய சிறு நூல்களும் தோன்றி வளர்ந்த காலத்தை அடுத்து, ஆங்காங்கே தனிப்பாடல்கள் பல பாடப்பட்டன. புலவர்கள் கண்ட சிறு நிகழ்ச்சிகளையும் உணர்ந்த சில உணர்ச்சிகளையும் தனிப்பாடல்களில் வடித் தார்கள். சங்க காலத்தைப் போல் தனித்தனியே பாடல்கள் அமைந்த காலம் அது.

காதல் துறையில் சங்க காலத்திற்குப் பிறகு பல்வேறு வடிவில் நூல்கள் தொடர்ந்து தோன்றிவந்த போதிலும், பழம் பாட்டுக்களின் கற்பனையில் அமைந்த விழுப்பமும் பண் பாடும் பிற்காலத்துக் காதல் கற்பனைகளில் அமையவில்லை எனலாம். சங்கச் சான்றோர்கள், காதலரின் உள்ளப் போராட்டத்தையும் உள்ளத்தின் உயர்ந்த ஆர்வத்தையும்

தியாக உணர்வையும் தம் காதல் பாட்டுக்களில் வடித்துள்ளார்கள். பிற்காலத்துக் காதல்பாட்டுக்கள் சிலவற்றைத் தவிர, பெரும்பான்மையான செய்யுட்களில் காதலரின் உடல் வருணனையும் உடற்பசியான காமமுமே விரிவாக இடம் பெற்றுள்ளன. உடற்பசிக்கு இடையே உள்ளம் எய்தும் உயர்நிலையை எடுத்துக்காட்டும் சிறப்பு, பிற்காலப் பாட்டுக்களில் அருகியே அமைந்துள்ளது.

## பழமையும் புதுமையும்

நாடகப் போக்கில் சில இலக்கிய வகைகள்—குறவஞ்சி பள்ளு என்பவை—தோன்றின. நாடக நூல்கள் பல தோன்றி மறைந்தன. சிந்து கீர்த்தனை முதலிய இசைப் பாடல் வடிவங்களில் சில சிறு நூல்கள் இயற்றப்பட்டன.

தமிழகம் மீண்டும் பிறருடைய ஆட்சிக்கு உட்பட்ட காலத்தில் மறுபடியும் பக்திப் பாடல்களும் மெய்யுணர்வுப் பாடல்களும் தோன்றின. குமரகுருபரரும் சிவப்பிரகாசரும் அருணகிரியாரும் தாயுமானவரும் தத்துவராயரும் பிள்ளைப் பெருமாளையங்காரும் பாடிய பாட்டுக்கள் குறிப்பிடத் தகுந்தவை. அருணகிரியார் பாடிய பாடல்கள் சந்தம் மிகுந்தவை. சந்தம் மிகுவதற்காகவே அவர் வடசொற் கலப்பும் மிகுதியாக மேற்கொண்டார். தத்துவராயர் மக்களிலக்கியத்தில் கண்ட புதுவடிவங்கள் பலவற்றைப் பயன்படுத்தினார்; பல்லிப்பாட்டு, குறி கூறும் பாட்டு, கிளிப் பயிற்றுப் பாட்டு, குரவை, குணலை, பகடி, பந்து, பறை, பாம்பாட்டு, நையாண்டி, இம்பில், காளம் முதலிய புதுவடிவங்களில் பாடல்கள் பாடினார். சென்ற நூற்றாண்டில் விளங்கிய இராமலிங்க வள்ளலாரும் அத்தகைய சில வடிவங்களைப் போற்றிப் பாடியுள்ளார். இந்த நூற்றாண்டில் பாரதியாரும் மக்களின் வாழ்வில் ஆர்வம் கொண்ட கவிஞர் ஆதலால், மக்களிலக்கியத்தின் வடிவங்களைப் பயன்படுத்தினார். பாடலாக அமையாத கோணங்கியின் ஓசையையும் பயன்படுத்தி அவர் 'புதிய கோணங்கி' பாடியிருத்தல் காணலாம். கவிஞர் பாரதிதாசனும் கழைக் கூத்தனின் ஒலியையும் ஏற்றப் பாட்டின் வடிவத்தையும் போற்றிப் பாடியுள்ளார். பல துறைகளில் பலவகை உணர்ச்சிகளைப் பாடுவதற்குத் தமிழ்

இடம் தந்து வளர்ந்தது. எளிய முறையில் சன்மார்க்கம் பாடுவதற்கு இராமலிங்க வள்ளலார் தமிழைப் பயன்படுத்தினர். விடுதலை உணர்ச்சியையும் சக்தி வழிபாட்டையும் உலக அரசியல் எழுச்சிகளையும் பாடுவதற்குப் பாரதியார்க்குத் தமிழ் உதவியது. புத்தம் புதிய கற்பனைகளுக்குப் பயன்படுத்திக் குயில்பாட்டு கண்ணன்பாட்டு முதலியவற்றையும் அவர் அளித்தார். சாதி முதலான மூட நம்பிக்கைகளைச் சாடும் சீர்திருத்த வேகத்திற்கும் தமிழரின் விழிப்புணர்ச்சிக்கும் தமிழைப் பயன்படுத்தியவர் பாரதிதாசன். ஐரோப்பியக் கவிஞர்போல் இயற்கையின் எழுதொணு எழிலைப் பாடுவதற்கும் பயன்படுத்தி வெற்றிகண்ட கவிஞர் சிலர் நம்மிடையே உள்ளனர். இருபது நூற்றுண்டுகளுக்கு மேலாகப் பல வேறு துறைகளின் தேவைக்கும் ஏற்றவாறு இடம் தந்து வளர்ந்துவந்த தமிழ், இந்த நூற்றுண்டிலும் பல புதுத்துறைகளை வரவேற்று வாழ்வளித்து வருகிறது.

முகமதியரும் ஐரோப்பியரும் தமிழகத்திற்கு வந்த பிறகு, இஸ்லாமிய சமயத்திற்காகவும் கிறிஸ்துவ சமயத்திற்காகவும் செய்யுள் வடிவ நூல்கள் தோன்றின. காவியங்கள் தோன்றின; பக்திப் பாடல்களும் தோன்றின.

## உரைநடை வளர்ச்சி

ஐரோப்பியர் வருகையால் தமிழ் பெற்ற பெரும் பயன் உரைநடை வளர்ச்சியும் அறிவு நூல்களின் வளர்ச்சியும் ஆகும். தத்துவ போதகரும் வீரமாமுனிவரும் உரைநடை வளர்ச்சிக்கு வழிகாட்டிஞர்கள். நிகண்டுகளும் நூற்பா வடிவான இலக்கண நூல்களும் இருந்த இடத்தில் அகராதிகளும் உரைநடை இலக்கணப் புத்தகங்களும் தோன்றின. வேதநாயகம் பிள்ளை மேற்கு நாட்டுப் புதுநூல் வகையான நாவல் என்னும் கதையிலக்கியத்தைத் தமிழ்மொழி பெறுமாறு செய்தார். அந்தத் துறை பலரால் வளர்க்கப்பட்டு, இந்த நூற்றுண்டில் கல்கி முதலானவர்களின் தொண்டிஞல் பெருமை பெற்றுள்ளது. சிறு கதை என்னும் மற்ருரு புதுவகை இலக்கியமும் புதுமைப்பித்தன் முதலானவர்களின் எழுத்துக்களால் ஆக்கம் பெற்றுள்ளது.

கல்விக் கூடங்களுக்குப் பாடநூல்கள் எழுதும் முயற்சி எழுந்தது. உரைநடை வளர்ச்சிக்கு ஆக்கம் தரும் வகையில் அம் முயற்சி பயன்பட்டது. ஐரோப்பிய முறையில் நாடக மேடைகள் தோன்றின; புதிய சமுதாய நாடகங்களும் புராண நாடகங்களும் நடிக்கப்பட்டன. அவற்றிற்குத் தேவையான உரைநடை நாடக நூல்கள் இயற்றப்பட்டன. அச்சுப் பொறியும் போக்குவரத்துக் கருவிகளும் ஏற்படுத்திய முன் னேற்றத்தால் திங்களிதழ்களும் வார இதழ்களும் நாளிதழ் களும் தோன்றின. பலவகைக் கருத்துக்களை உணர்த்து வதற்கு ஏற்ற கருவியாகத் தமிழ் உரைநடை விரைந்து வளரலாயிற்று. அவற்றில் அறிவுத் துறையும் வளர்ச்சி பெற்றது; இலக்கியத் துறையும் வளர்ச்சி பெற்றது. உலகச் செய்திகள், நாட்டு நடப்புகள், தொழில்வகைச் செய்திகள், வாணிகச் செய்திகள், மருத்துவம் வானநூல் சோதிடம் பொறியியல் முதலியன பற்றிய செய்திகள் ஆகிய இவை அறிவுத் துறையில் உரைநடை வளர உதவின. உணர்ச்சியான கட்டுரைகள், சொற்பொழிவுச் சுருக்கங்கள், வாழ்க்கை வரலாறுகள், பயணக் கட்டுரைகள், சிறு கதைகள், தொடர் கதைகள், ஓரங்க நாடகங்கள் முதலானவை இலக்கியத் துறையில் உரைநடை வளர்வதற்கு உதவி புரிந்தன. இந்த இருவகையிலும் ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய பிறமொழி நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு வெளி யாயின. அவற்றாலும் இருதுறையிலும் வளர்ச்சி காண முடிந்தது.

உரையாசிரியர்களின் கையில் மட்டும் இருந்தபோது, உரைநடை செறிவு மிகுந்ததாய் இருந்தது; அருஞ் சொற்கள் விரவியதாய் இருந்தது; நாற்சீர் அகவலடிபோல் வரையறை உடையதாய்ச் செயற்கையானதாய் இருந்தது. இன்று எளிய சொற்களும் சொற்றொடர்களும் மிகுந்ததாய், செயற் கைத் தன்மை இழந்து இயற்கையான வளர்ச்சி பெற்று வருகிறது. மக்களின் எண்ணங்கள் எந்த முறையில் அமை கின்றனவோ அதே முறையில் இன்றைய உரைநடை வாக் கியங்களின் சொற்கள் நேரே அமைகின்றன. எண்ணங்களின் அமைப்புக்கும் சொற்றொடர்களின் அமைப்புக்கும் மாறுபாடு இல்லை. எண்ணங்களின் புறவடிவங்களாகவே சொற்றொடர் கள் அமைகின்றன. இந்த இயல்பான போக்கு வளர்ந்து விட்டது. ஆகவே, உரைநடை இன்று புதுப்புது வளர்ச்சி

களுக்கு ஏற்ற கருவியாகப் பயன்பட்டு வருகிறது. திரு. வி. க. முதலான சான்றோர்களும் அறிஞர்களும் உரை நடையை இலக்கியம் அரசியல்துறை சமுதாயச் சீர்திருத்தத் துறை முதலிய பலவற்றிற்கும் பயன்படுத்தி வெற்றி கண்டுள் ளனர்.

## அறிவுத்துறை நூல்கள்

கணக்கு முதலிய அறிவுத்துறைகள் எண் எனப்படும். கவிதை முதலிய இலக்கியத்துறைகள் எழுத்து எனப்படும். இரண்டும் கல்விக் கண்கள் என்பர் திருவள்ளுவர். முன் பெல்லாம் இலக்கியத்துறையில் நூல்கள் மிகுந்திருந்தன. இக்காலத்தில் அறிவுத்துறை நூல்கள் பெருகி வருகின்றன. காரணம் என்ன? முன்பு, கணக்கு வாணிகம் மருத்துவம் தொழில் நுணுக்கங்கள் முதலிய அறிவுத்துறைகள் குடும்பக் கல்வியாக இருந்தன; வழிவழியாகக் குடும்பத்தாரால் கற்பிக்கப்பட்டு வந்தன. முன்பெல்லாம், வாழ்க்கை எளி மையானதாக இருந்தது; ஆகையால் அந்த அறிவுத் துறை களும் எளியனவாக இருந்தன. இந்தக் காலத்தில் வாழ்க்கை அவ்வளவு எளிமையாக இல்லை; சிக்கல்கள் பெருகிவிட்டன; துறைகள் பெருகி வளர்ந்துவிட்டன; யந்திரங்களும் அவற் றின் நுட்பங்களும் பெருகிவிட்டன. எதையும் அறிவியல் முறையின்படி ஆய்ந்து தெளிவுபடுத்தி எழுதிவைத்துப் போற்றுதல் தேவையாகிவிட்டது. குடும்பக் கலையாகவே இன்றுவரையில் இருந்துவரும் சமையல் முதலியன பற்றியும் நூல்கள் எழுதப்பட்டுப் பட்டப்படிப்பு அமைந்துள்ள காலம் இது. ஆகையால், இன்றைய தேவைக்கு ஏற்ப அறிவுத் துறை நூல்கள் பெருகிவிட்டன; இன்னும் பல மடங்கு பெருக வேண்டியதும் இன்றியமையாதது ஆகிவிட்டது. தனிப்பாட்டு, காவியம், நாடகம், நாவல், சிறுகதை, வாழ்க்கை வரலாறு, கட்டுரை ஆகிய இலக்கியத்துறைகளை விட, மேற்குறித்த அறிவுத்துறை நூல்கள் எல்லா மொழி களிலும் விரைந்து பெருகுகின்றன, தமிழ்மொழியும் இவ் வகையில் பின்தங்காமல் வளர்ச்சி பெறவேண்டும்.

ஆனால், தமிழில் இலக்கியத்துறையை வளர்ப்பதில் மட்டுமே சென்ற நூற்றாண்டுவரையில் ஆர்வம் இருந்து வந்தது. சில அறிவுத்துறை பற்றிய நூல்கள் தமிழில் பழங்காலத்தில் இருந்த போதிலும், பின்வந்தோர் அவற்

றைக் காத்து வளர்க்கவில்லை. அறிவுத்துறைகளை விடாமல் வளர்த்து வந்தது வட மொழி. ஆகவே, அறிவுத்துறை பற்றி நாடும்போதெல்லாம் வட மொழியை நாடுவது வழக்க மாக இருந்தது. இலக்கியத்துறைக்குத் தமிழும் அறிவுத் துறைக்கு வட மொழியும் என்று வகுத்துக்கொண்டு, வட மொழி நூல்களைச் சார்ந்து வாழ்ந்து வந்தனர். அதனால் வட மொழி அறிஞர்க்குப் பெருமிதமும் செல்வாக்கும் மிகுந்தன. ''தமிழில் என்ன உள்ளது?'' என்று தமிழர் சிலர் எள்ளி வினவும் வருந்தத் தக்க போக்குக்கு இடம் ஆயிற்று.

அதே நிலைமை இன்றும் உள்ளது; வேறு வடிவில் உள்ளது. அறிவுத்துறை நூல்களுக்கு ஆங்கிலத்தைச் சார்ந்து பழகி விட்டமையால், முன்காலத்து வட மொழி அறிஞர்களைப் போல் இக்காலத்து ஆங்கில அறிஞர்க்குப் பெருமிதமும் செல் வாக்கும் வளர்ந்துவிட்டன. ''தமிழில் என்ன உள்ளது?'' என்ற பழங்காலச் செருக்கான கேள்வியைக் கேட்போர் இன்றும் தமிழரிடையே இருந்துவருகின்றனர்.

## அறிஞர் கடமை

நம் குறை உணர்வோம்; திருந்துவோம்; முன்னேறு வோம். தமிழ்மொழி இலக்கியத்துறையில் பெற்றிருக்கும் நல்ல வளர்ச்சி போல், அறிவுத்துறையிலும் நல்ல வளர்ச்சி பெறவேண்டும். ஆங்கிலம் ஜெர்மன் பிரெஞ்சு ரஷ்ய மொழிகள் இருதுறைகளிலும் வளர்ந்து முன்னேறிய மொழிகள். எண்ணாகிய கண் எழுத்தாகிய கண் ஆகிய இரு கண்களும் ஒளியுடன் விளங்கும் மொழிகள் அவை. தமிழ் ஒரு கண்ணால் மட்டும் பெருமை பெற்று விளங்குதல் போதாது. மற்றொரு கண் நொள்ளையாக இருத்தல் பெரும் பழியாகும். அந்தப் பழியைத் துடைக்க முயல்வோம். பிறநாட்டு நூல்களை மொழிபெயர்த்துப் பெருக்குவோம். பிற மொழியில் உள்ள அறிவுநூல்களைக் கற்று அவற்றை ஒட்டித் தமிழில் புதுநூல்கள் படைப்போம். பல துறை யிலும் நூல்கள் அமைவதற்கு ஏற்ற முறையில் தமிழ் உரை நடை தக்க வளர்ச்சி பெற்றுள்ளது. தமிழ்மொழியும் அதற்கு உரிய ஆற்றல் பெற்ற மொழியாகும். வேர்ச் சொற் கள் தெளிவாகப் புலப்படும் ஒட்டு நிலைமொழி ஆகையால்,

தமிழில் புதுச் சொற்களை எளிதில் படைத்துப் பெருக்க முடியும்; எளிதில் வழங்கவும் முடியும். உலகக் கலைச் சொற்கள் பெரும்பயன் அளிக்குமிடத்து, அவற்றையும் பயன் படுத்திக்கொள்ள முடியும். தமிழ் வளர்வதற்குக் காத்து நிற்கின்றது; தமிழர்தாம் வளர வேண்டும். தமிழ் பயன் தரக் காத்து நிற்கின்றது; தமிழர் உளமுவந்து அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தமிழ் தமிழரைக் கூவி அழைக்கின்றது; தமிழர் போதிய ஆர்வம் கொண்டு இசைந்து செவிசாய்க்க வேண்டும்.

தமிழரின் சிந்தனை, நுட்பமும் ஆழமும் பரப்பும் உடையதாக வளர்ந்தால், தமிழும் ஆங்கிலம் முதலிய மொழிகளைப்போல் நுட்பம் ஆழம் பரப்பு எல்லாம் பெற்று ஒளிரும். இலக்கியத்துறை அறிவுத்துறை ஆகிய இரண்டிலும் தமிழ் வாயிலாகச் சிந்தனை பெருகினால்தான், இந்த இரு துறைகளிலும் தமிழ் நூல்கள் பெருக முடியும். சிந்தனை ஒரு துறையில் ஒரு மொழியில் பெருக வேண்டுமானால், அந்தத் துறை பற்றிக் கற்கும் கல்வி அந்த மொழியிலேயே அமைந்தால்தான் முடியும். இன்று பல்கலைக் கழகக் கல்விக் கூடங்களில் இலக்கியத்துறையைத் தமிழில் கற்பித்தல் போல், அறிவுத்துறைகள் எல்லாவற்றையும் தமிழில் கற் பித்தல் வேண்டும். அந்நிலை நன்கு அமைந்தால்தான், தமிழில் சிந்தனை செய்ய வல்லவர்கள் பெருகுவார்கள்; தமிழ்ச் சிந்தனையாளர் பெருகினால்தான் தமிழில் அறிவுத் துறை நூல்கள் பெருகும். இல்லையேல், தமிழில் சிந்தனை செய்யமாட்டாத குறை ஒன்றே எஞ்சி நிற்கும்; அந்தக் குறையை மறைப்பதற்காக, தமிழில் முடியாது என்றும், தமிழில் என்ன உள்ளது என்றும் தமிழரே திரும்பத் திரும்பக் கூறித் திரிவதைக் காண்போம். ஆகையால், அந்தக் குறைக்கு இடம் தராமல், தமிழின் இலக்கியக் கண் ஒளி பெற்றுத் திகழ்தல்போல், அறிவுக் கண்ணும் ஒளி பெற்றிடச் செய்தல் இன்றைய அறிஞரின் கடமையாகும். அந்தக் கடமையை நிறைவேற்றினால், தமிழ் வளர்ச்சியில் உள்ள குறையும் தீர்ந்துவிடும்; தமிழைத் தக்கவாறு பயன் படுத்தத் தவறிய தமிழரின் பழியும் தீர்ந்துவிடும்.

அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்;
பெருமை முயற்சி தரும். (திருவள்ளுவர்)

---

Hoe & Co., Madras